நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
முன்னிலை : திருமதி.V.பாரத தேவி, எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தேனி.
2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 10–ம் நாள் வெள்ளிக்கிழமை
குற்றவியல் பல்வகை மனு எண்.1875/2026
**CNR NO.TNTH020022652026**

*****

S. வரலட்சுமி (23/2026),
த/பெ. சேகர்பாபு ....மனுதரார்/ உரிமையாளர்

/எதிர்/

அரசுக்காக – சார்பு ஆய்வாளர் அவர்கள்,
தேனி காவல் நிலையம்,
குற்ற எண்.330/2024 ....எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு இன்றைய தினம் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாகனத்தின் உரிமையாளர் தரப்பில் வழக்கறிஞர் P.செந்தில் குமார், B.B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் அரசு குற்றத்துறை தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கிறஞர் நிலை–II அவர்கள் ஆஜராகினார்.

**உத்தரவு**

1) இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தின் அசல் RC புத்தகத்தினை மனுதாரர்/உரிமையாளர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்க கோரி மனுதாரர் இம்மனுவை U/s.497, 503 BNSS ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்கள்.

**2) மனுவின் சுருக்கம்**

மனுதாரர்/உரிமையாளர் கடந்த 15.10.2024–ம் தேதி மாண்பமை சமூகம் நிதிமன்றத்தில் தன்னுடைய வாகனத்தை ஒப்படைக்க கோரி Crl.M.P. No.7412/2024 என மனு தாக்கல் செய்து அம்மனுவானது 21.10.2024ம் தேதியன்று நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டு வாகனத்தை ஒப்படைக்க உத்தரவிடப்பட்டிருந்ததாகவும், இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் CRLOP (MD) NIO.3656/2026 என எதிரிகள் தாக்கல் செய்த வழக்கு பிரிவு 482 Cr.P.C/528 BNSS–ன் கீழ் கடந்த 20.02.2026ம் தேதியில் Quash செய்து உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், எனவே, மேற்படி Cr. No.330/2024 வழக்கில் சமூகம் நிதிமன்றத்தின் பொறுப்பில் உள்ள மனுதாரருடைய அசல் RC Book–க்கை மனுதாரர்/உரிமையாளரின் வசம் ஒப்படைக்கவேண்டுமாய் மனுவில் கூறியுள்ளார்.

3) **அரசு மற்றும் எதிர் மனுதாரருக்கு தரப்பிற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது பதில் பெறப்பட்டது**

இவ்வழக்கானது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மகுரை கிளையில் Crl. OP(MD)

No.3656/2026–ன் படி Quash செய்யப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கின் சொத்தான TN 60 AP 5005 என்ற வாகனத்தின் RC புக்கை மனுதாரர் வசம் ஒப்படைக்க ஆட்சேபனை ஏதுமில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.**

(i) மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் CRLOP(MD) No.3656/2026 என தாக்கல் செய்யப்பட்ட Cr.No.330/2024 என்ற வழக்கானது கடந்த 20.02.2026ம் தேதியில் Quash செய்யபட்டுள்ளதாகவும், எனவே, நீதிமன்ற பொறுப்பிலுள்ள தனது வாகனத்தின் அசல் RC Book –யை ஒப்படைக்குமாறும் கூறப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில், மேற்படி வழக்கு சொத்தின் RC புக்கை மனுதாரர் வசம் ஒப்படைக்க ஆட்சேபனை ஏதுமில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) இருதரப்பு வாதம் பரிசீலிக்கப்பட்டது.

(iii) மனுதாரர் தரப்பு மனுவில் தெரிவித்துள்ள காரணத்தை கருத்திற்கொண்டு, மனுவானது பின்வருமாறு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்.**

(i) மனுதாரர் TN 60 AP 5005 என்ற வாகனத்தின் RC BOOK நகலை மட்டும் நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டபின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்து 2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 10–ம் நாள் வெள்ளிக்கிழமை என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.07.10 15:57:33 +0530

நீதித்துறை நடுவர்,
தேனி.